# Indian Polity Notes Part 12 in Tamil

## 12] உள்ளாட்சி = ஊராட்சிகள் / பஞ்சாயத்துக்கள்

நமது இந்திய நாடு மிகப்பெரிய நிலப்பரப்பைக் கொண்டது. இங்கு மக்கள்தொகை மிக அதிகம். இங்கு வாழும் மக்கள் சிற்றூர்களிலும் (கிராமங்களிலும்), பேரூர்களிலும், நகரங்களிலும் வாழ்கிறார்கள். தேவைகள், பிரச்சனைகள் அனைத்தையும், மத்தியிலும் மாநிலத்திலும் உள்ள அரசுகளினால் மட்டுமே தீர்த்து வைக்க இயலுவதில்லை.

- நாட்டின் தொலைதூரத்தில் உள்ள மக்களுக்குச் சேவை செய்வதற்கே உள்ளாட்சி நிருவாக அமைப்புகள் இந்தியாவில் அமைக்கப்பட்டுள்ளன.
- இந்திய நாட்டில் மத்திய,மாநில மற்றும் உள்ளாட்சி நிர்வாக அமைப்புக்களும் உள்ளன.
- உள்ளாட்சி அமைப்புகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நிர்வாகம் செய்கின்றது.
- மக்களாட்சி/ஜனநாயக அமைப்பின் உயிர் நாடியாக விளக்குவது உள்ளாட்சி அமைப்புகள் ஆகும்.
- அந்த உள்ளாட்சி அமைப்பை ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி, மாவட்ட ஊராட்சி ஆகிய அமைப்புகளும் மக்கள் பிரதிநிதிகளுடன் செயல்படுகின்றன. இந்த அமைப்பிற்கு “உள்ளாட்சி நிருவாகம்” என்று பெயர்.
- ஆங்கிலேய ஆட்சியாளர் “ரிப்பன் பிரபு” என்பர் உள்ளாட்சி அமைப்பு முறையை இந்தியாவில் நடைமுறைப்படுத்தினார். எனவே இவர் “உள்ளாட்சி நிர்வாகத்தின் தந்தை” என அழைக்கப்படுகிறார்.
- நாட்டு விடுதலைக்கு முன்பே உள்ளாட்சி நிருவாகம் நம்நாட்டில் ஏற்படுத்தப்பட்டு இருந்தது.

**பல்வந்த்ராய் மோத்தா குழு (1957)**

- ஜனவரி 1957 – ல் இந்திய அரசு சமுதாய அபிவிருத்தி திட்டம் (Community Development programme - 1952) மற்றும் National Extension Services (1953) ஆகிய திட்டங்களின் செயல்பாட்டினை அறிய பல்வந்த்ராய் மேத்தா தலைமையில் ஒரு குழுவை நியமித்தது.
- இந்தத் திட்டங்களை செயல்படுத்த போதுவாக அரசு இயந்திரங்கள் இல்லாததால் தோல்வியடைந்தது. எனவே ஜனநாயகப் பரவலாக்குதல் (Democratic Decentralidation) அதாவது பஞ்சாயத்து அமைப்புக்களை உருவாக்க வேண்டும் என 1957 – ல் பரிந்துரை செய்தது.

**இதன் பரிந்துரைகள்**

- மூன்றடுக்கு பஞ்சாயத்து அதாவது (கிராம அளவில் கிராம பஞ்சாயத்து, வட்ட அளவில் பஞ்சாயத்து சமிதி, மாவட்ட அளவில் ஜில்லா பரிசத்) அமைக்க வேண்டும்.

- கிராம அளவில் உறுப்பினர்கள் நேரடியாகவும், வட்ட மற்றும் மாவட்ட அளவில் மறைமுகத் தேர்தல் மூலமாகவும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- இந்த அமைப்புக்களுக்கு திட்டமிடல் மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.
- பஞ்சாயத்து சமிதி செயல்படுத்தும் அமைப்பாகவும், ஜில்லா பரிசத் ஆலோசனை கூறும், ஒருங்கிணைக்க மேற்பார்வையிடும் அமைசப்பாகவும் செயல்பட வேண்டும்.
- மாவட்ட ஆட்சியர் ஜில்லா பரிசத்தின் தலைவராக செயல்பட வேண்டும்.
- இந்த அமைப்புகளுக்கு உண்மையான அதிகாரங்களும், பொறுப்புகளும் அளிக்கப்பட வேண்டும்.
- இந்த பரிந்துரைகளை தேசிய வளர்ச்சிக்குழுமம் 1958 – ல் ஏற்றுக் கொண்டது. ஆனால் ஒரு முழுமையான முறையில் செயல்படுத்தாமல், மாநிலங்கள் தங்களுக்கு ஏற்ப செயல் அமைப்புகளை / உள்ளாட்சி அமைப்புகளை ஏற்படுத்த விட்டுவிட்டது.
- ராஜஸ்தான் மாநிலம் முதல் பஞ்சாயத்து ராஜ் அமைப்பினை நாகௌர் மாவட்டத்தில் 02.01.1959 - அமைத்தது, பிறகு ஆந்திர பிரதேச மாநிலம் தொடங்கியது.

**அசோக் மேத்தா குழு (1977)**

- டிசம்பர் 1977 – ல் ஜனாத அரசு பஞ்சாயத்து ராஜ் அமைப்பிற்கு அசோக் மேத்தா தலைமையில் ஒரு குழுவை நியமித்தது.

**பரிந்துரைகள்**

- இரண்டடுக்கு பஞ்சாயத்து முறையை (அதாவது மாவட்ட அளவில் ஜில்லா பரிசத், 15,000 முதல் 20,000 வரை மக்கள்தொகை கொண்ட சிற்றூரகள் இணைத்து மண்டல பஞ்சாயத்து) அமைக்க பரிந்துரை செய்தது.
- ஜில்லா பரிசத்" செயல்படுத்தும் அமைப்பாகவும், மாவட்ட அளவில் திட்டமிடும் அமைப்பாகவும் செயல்பட வேண்டும்.
- பஞ்சாயத்து அமைப்புகளுக்கு விரிவிதிக்கும் அதிகாரம் வழங்கபட வேண்டும்.
- நியாய பஞ்சாயத்து அமைக்கப்பட வேண்டும்.

**L.M சிங்வி குழு – 1986**

- பஞ்சாயத்து ராஜ் அமைப்புக்களுக்கு ஜனநாயக மற்றும் வளர்ச்சி சார்ந்து புத்துயிர் அளிப்பது தொடர்பாக ராஜிவ் காந்தி அரசு, சிங்வி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது.

**பரிந்துரைகள்**

- பஞ்சாயத்து அமைப்புக்களை அங்கீகரிக்க, பாதுகாக்க அரசியலமைப்பு அங்கீகாலம் அளிக்க வேண்டும்.

- கிராம சபைகளை உருவாக்க கிராம பஞ்சாயத்துக்களுக்கு அதிகாரம் வழங்க வேண்டும்.
- வழக்கமாக, சுதந்திரமான, நியாயமான தேர்தல் நடத்தப்பட வேண்டும்.
- கிராம பஞ்சாயத்துகளுக்கு நிதி அதிகாரங்களை வழங்க வேண்டும்.

**அரசியலமைப்பு அங்கீகாரம்**

- 1989 சூலையில், ராஜீவ்காந்தி அரசு 64 – வது அரசியலமைப்புத் திருத்த மசோதவை மக்களவையில் அறிமுகப்படுத்தியது. அது ஆகஸ்ட் 1989 – ல் நிறைவேற்றப்படவில்லை.
- நவம்பர் 1989 – ல் பதவியேற்ற வி.பி.சிங் அரசு, சூன் 1990 – ல் மாநில முதல்வர்கள் மாநாட்டினை 2 நாட்கள் நடத்தியது. இதில் புதிய அரசியலமைப்புத் திருத்த மசோதா அறிமுகப்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டது. பிறகு செப்டம்பர் 1990 – ல் மக்களவையில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் அரசு தோல்வியுற்றதால் (V.P சிங் அரசு கலைக்கப்பட்டது) காலாபதி ஆகிவிட்டது.
- பிறகு P.V நரசிம்மராவ் அரசு செப்டம்பர் 1991 – ல் மக்களவையில் அறிமுகப்படுத்தியது. இது டிசம்பர் 22, 1992 – ல் மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது. இதை 17 மாநில சட்டமன்றங்கள் ஒப்புதல் பெற்றது.

**73 – வது அரசியலமைப்பு திருத்தச் (1992) சட்டம்**

- 73 – வது அரசியலமைப்பு திருத்தச் (1992) சட்டத்தின்படி ஊராட்சி அமைப்புகளுக்கு அசியலமைப்பு ரீதியான அங்கீகாரம் (Consttutional Status) அளிக்கப்பட்டது.
- 73 – வது திருத்தம் 24.04.1993 – ல் நடைமுறைக்கு வந்தது.
- பஞ்சாயத்து அமைப்புகளுக்கு அரசியல் ரீதியான அங்கீகாரம் திரு.நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசு வழங்கியது.
- சரத்து 40 – ன்படி அளிக்கப்பட்ட பஞ்சாயத்து அமைப்புகளுக்கு பகுதிக்கு நீதிமன்ற விசாரணைக்குட்பட்ட பகுதிக்கு கொண்டு வந்தது 73 – வது திருத்தமாகும்.
- 73- வது திருத்தத்தின்படி
    - பகுதி “ஒன்பது” (Part – 9) இணைக்கப்பட்டது.
    - சரத்துக்கள் 243, முதல் 243 – O வரை 16 சரத்துக்கள் இணைக்கப்பட்டது.
    - 11 – வது அட்டவணை இணைக்கப்பட்டது.
    - 11 – வது அட்டவணையில் 29 துறைகள் (Functional items) உள்ளன.
- இத்திருத்தம் ஒவ்வொரு மாநிலத்திலும் ஊராட்சி அமைப்பை ஏற்படுத்த வழி வகுத்தது.
- ஒரு ஊராட்சிக்கு அதிகாரம் மற்றும் பணிகளை அளிப்பது மாநில சட்டமன்றம் ஆகும்.

**சரத்து – 243**

- “கிராம சபை” என்பது அப்பகுதியில் உள்ள பதிவு பெற்ற அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கியது.
- “கிராமங்கள்”, “இடைநிலை பகுதிகள்”, “மாவட்டங்கள்” என்பதனை குறிப்பிடும் அதிகாரம் பெற்றவர் ஆளுநர்.
- பஞ்சாயத்து என்பது கிராமங்களில் சரத்து 243 B – ன்கீழ் அமைக்கப்பட்ட தன்னாட்சி அரசு.
- “பஞ்சாயத்து எல்லை / பகுதி என்பது பஞ்சாயத்து பரப்பெல்லை.
- “மக்கள் தொகை“ என்பது கடைசியாக எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு.

**சரத்து 143 – A**

- கிராம சபை, மாநில சட்டமன்றம் அளிக்கும் அதிகாரிகள் மற்றும் பணிகளை கிராம அளவில் செயல்படுத்தலாம்.

**பஞ்சாயத்தின் அமைப்பு (சரத்து 243 B)**

- மூன்றடுக்கு பஞ்சாயத்து முறையினை கூறுகிறது.

1. கிராம பஞ்சாயத்துக்கள் (Panchayat at Vilage)
2. இடைநிலை பஞ்சாயத்துக்கள் (Intermediate)
3. மாவட்ட பஞ்சாயத்துக்கள் (District level)

- 20 லட்சத்திற்கும் குறைவாக மக்கள்தொகை இருந்தால் இடைநிலை பஞ்சாயத்துக்கள் அமைக்காமலும் இருக்கலாம்.

**கட்டமைப்பு (Composition) (சரத்து – 243 C)**

- மூன்று நிலைகளிலும் உள்ள உறுப்பினர்கள் நேரடித் தேர்தல் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- இடைநிலை மற்றும் மாவட்ட ஊராட்சித் தலைவர் பதவிக்கு மறைமுகத் தேர்தல் (தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால்) மூலமாகா தேர்ந்தெடுக்கபட்ட வேண்டும்.
- கிராம பஞ்சாயத்து தலைவரை எவ்வாறு தேர்தெடுப்பது என்பதை மாநில சட்டமன்றம் தீர்மானிக்கும்.

**இட ஒதுக்கீடு (சரத்து – 243 D)**

- மூன்று நிலை ஊராட்சிகளிலும், பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடி மக்களுக்கு அம்மக்கள் தொகையின் அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்க வேண்டும்.
- ஊராட்சி தலைவர் பதவிக்கு பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடி மக்களுக்கு இட ஒதுக்கீடு வழங்க, மாநில சட்டமன்றம் வழி வகை செய்தல் வேண்டும்.

- பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கிற்கு குறையாத பஞ்சாயத்து தலைவர் பதவிக்கு (மூன்று நிலைகளில்) இட ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.
- பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு சம்பந்தமாக மாநில சட்டமன்றம் வழிவகை செய்து கொள்ளல

**பதவிக்காலம் (Duration) (சரத்து 243 E)**

- மூன்று நிலைகளிலும் உள்ள ஊராட்சிகளின் பதவிக்காலம் முதல் கூட்டத்தில் இருந்து 5 ஆண்டுகள் ஆகும்.
- இப்பதவிக் காலம் முடியும் முன்பே மாநில அரசால் கலைக்கப்படலாம். அவ்வாறு கலைக்கப்பட்டால், கலைக்கப்பட்ட தேதியிலிருந்து 6 மாதங்களுக்குள் தேர்தல் வைத்து புது ஊராட்சிகளை அமைக்க வேண்டும்.
- 5 ஆண்டு பதவிக்காலம் முடிவுறும் முன்பே புதிய பஞ்சாயத்து அமைப்புகளுக்கான தேர்தல் நடத்தி முடித்திட வேண்டும்.
- கலைக்கப்பட்ட பஞ்சாயத்தின் மீது காலம் 6 மாதத்திற்கு குறைவாக இருந்தால் தேர்தல் நடத்த அவசியம் இல்லை.
- கலைக்கப்பட்ட பஞ்சாயத்திற்கு பதிலாக அமைக்கப்பட்ட பஞ்சாயத்து மீது கால அளவு வரை செயல்படும். (கலைக்கப்பட்ட பஞ்சாயத்து கலைக்கப்படாமல் இருந்தால் எவ்வளவு காலம் இருக்குமோ அதுவரை).

**உறுப்பினர்களின் தகுதியின்மை (சரத்து – 243 F)**

- நடைமுறையில் இருக்கும் ஒரு சட்டத்தின் படியோ அல்லது மாநில சட்டமன்றம் இயற்றும் சட்டத்தின்படியோ கூறப்பட்டிருக்கும் தகுதியின்மை காரணமாக நீக்கம் செய்யலாம்.
- 21 வயது அடைந்து 25 வயதிற்கு கீழ் இருக்கும் ஒருவரை 25 வயதிற்கு குறைவாக இருப்பதை காரணமாக காட்டி தகுதியின்மை செய்தல் கூடாது.
- மாநில சட்டமன்றம் நிர்ணயிக்கும் ஒரு அதிகார அமைப்பு தகுதியின்மை பற்றி விசாரணை செய்யும்.

**அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகள் (சரத்து – 243 G)**

- மாநில சட்டமன்றம் ஊராட்சி அமைப்புகளுக்கு தக்க அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை வழங்க வேண்டும்.
- தன்னாட்சி அரசுகாளக செயல்படும் அளவிற்கு அதிகாரப் பகிர்வு கொடுக்க வேண்டும்.
- பொருளாதார வளர்ச்சி அல்லது மேம்பாடு மற்றும் சமூக நீதி திட்டங்கள் விரைவு செய்ய,திட்டங்களை செயல்படுத்த அதிகாரமளிக்க வேண்டும்.

- 11 வது அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள 29 துறைகள் (Functionalitems) தொடர்பாக அதிகாரமளிக்க வேண்டும்.

**வரிவிதிக்கும் அதிகாரம் (ம) நிதிகள் (சரத்து – 243 H)**

- மாநில சட்டமன்றம் வரிவிதிப்பு, வசூல் மற்றும் கட்டணங்கள் போன்ற வற்றை வசூலிக்க அதிகாரமளிக்கலாம்.
- மாநிலத் தொகுப்பு நிதியிலிருந்து மானியங்கள் வழங்கலாம்.

**மாநில நிதிக்குழு (Finance Commissio) (சரத்து – 243 I)**

- மாநில ஆளுநர், 73 – வது திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த ஒரு ஆண்டிற்குள் ஒரு நதிக் குழுவினை அமைக்க வேண்டும்.
- பின்னர் 5 ஆண்டிற்கு ஒருமுறை ஒரு நிதிக்குழுவை அமைக்க வேண்டும்.
- இந்நிதிக்குழு ஊராட்சி அமைப்புகளின் நிதிநிலையை மறு ஆய்வு செய்து பரிந்துரைகளை ஆளுநருக்கு அனுப்பும்.

**மாநில நிதிக்குழுவின் பரிந்துரைகள் / பணிகள்**

1. மாநில அரசு மற்றும் ஊராட்சி அமைப்புகளுக்கு இடையே நிதி எவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என ஆளுநருக்கு பரிந்துரை செய்கிறது.
2. வரி tolls கட்டணங்கள் போன்றவைகளை நிர்யிக்க ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்க பரிந்துரைக்கும்.
3. மாநில தொகுப்பு / திரட்டு நிதியிலிந்து பஞ்சாயத்துக்களுக்கு மானியங்கள் வழங்குவது பற்றி பரிந்துரை செய்கிறது.
4. ஊராட்சிகளின் நிதிநிலையை அதிகிக்க வழிமுறைகளை கூறும்.
5. ஊராட்சி நிதி குறித்த விசயங்கள் தொடர்பாக ஆளுநர் ஏதேனும் பரிந்துரைத்தால் அதுபற்றி ஆலோசித்து பரிந்துரை செய்யும்.

- நதிக் குழுவின் கட்டமைப்பு, உறுப்பினர்களின் தகுதி, உறுப்பினர்களின் எண்ணிக்கை போன்றவைகளை நிர்ணயிக்கும் அதிகாரம் மாநில சட்டமன்றத்திடம் உள்ளது.
- மாநில சட்டமன்றம் நதிக்குழுவிற்கு அதிகாங்களை வழங்கும்.
- நதிக்குழு தனது அறிக்கையினை ஆளுநரிடன் சமர்ப்பிக்கும், அவர் அதனை விளக்கக் குறிப்புகளுடன் சட்டமன்றத்தில் சமர்ப்பிப்பார்.

**கணக்குகளின் தணிக்கை (Audit) (சரத்து – 243 J)**

- மாநில சட்டமன்றம் இயற்றும் சட்டத்தின்படி ஒவ்வொரு ஊராட்சி அமைப்புகளுக்கு கணக்கு நிர்வித்தல் மற்றும் தணிக்கை செய்ய வேண்டும்.

**பஞ்சாயத்குத் தேர்தல் (சரத்து – 243 K)**

- மாநில தேர்தல் ஆணையர் ஆளுநரால் நியமிக்கப்படுகிறார்.
- பஞ்சாயத்துக்களின் தேர்தல் மேற்பார்வை, வாக்காளர் பட்டியல் தயாரிப்பு, கட்டுப்பாடு போன்றவைகளை நடத்துவது மாநில தேர்தல் ஆணையம்.
- மாநில தேர்தல் ஆணையரின் பதவிக் காலத்தை நிர்ணயம் செய்வது ஆளுநர்
- மாநில தேர்தல் ஆணையரின் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்றால் உயர் நீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கம் செய்யும் முறையில் செய்யப்பட வேண்டும்.
- பணிநிலைமைகளை பணிக்காலத்தில் குறைத்தல் கூடாது.
- பஞ்சாயத்து தேர்தல் தொடர்பான அனைத்து விடயங்களுக்கும் சட்டமன்ற சட்டம் இயற்றி வகை செய்யலாம்.

**யூனியன் பிரதேசங்களுக்கு பொருந்தக்கூடிய தன்மை (சரத்து – 243 L)**

- யூனியன் பிரதேசங்களுக்கு பொருந்தக் கூடியதை குடியரசுத் தலைவர் அறிவிப்பார்.

**சில பரப்பிடங்களுக்கு பொருந்தாது (சரத்து – 243 M)**

- சரத்து 244 – ல் கூறப்பட்டுள்ள ஐந்துாவது அட்டவணையில் உள்ள பகுதிகள் (அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா, மிஸோரம் தவிர மற்ற மாநிலங்களில் உள்ள பகுதிகள்) மற்றும் 6 வது அட்டவணையில் உள்ள அஸ்ஸாம், மேகாலயா, திரிபுரா,மிஸோரம் ஆகிய மாநிலங்களில் உள்ள பகுதிகள்.
- நாகாலாந்து, மேகாலாயா, மிஸோரம்.
- மணிப்பூர் மாநிலத்தில் மாவட்ட அவை உள்ள மலைப்பகுதிகளில்.
- மேற்கு வங்காள மாநிலத்தில் டார்ஜிலிங் மாவட்டத்தில் மலைப்பகுதியில் உள்ள டார்ஜிலிங் கோர்கா அவை உள்ள இடங்களில்.
- (பட்டியல் இனத்தவருக்கான இட ஒதுக்கீடு அருணாச்சலபிரதேச மாநிலத்திற்கு பொருந்தாது).

**சரத்து – 243 N**

- 73 வது சட்டத் திருத்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு மாநிலங்களின் பஞ்சாயத்துகள் தொடர்பான ஏதேனும் சட்டங்கள் இருந்தால் தகுதி வாய்ந்த சட்டமன்றம் ரத்து செய்யும் வரையிலோ அல்லது அமலுக்கு வந்த தேதியிலிருந்து ஒரு ஆண்டு வரையிலோ (எது முதலில் வருகிறதோ) நடைமுறையில் இருக்கும்.
- இத்திருத்தம் அமலுக்கு வருவதற்கு முன்பு நடைமுறையில் உள்ள அனைத்து பஞ்சாயத்து அமைப்புகளும் பதவிக்காலம் முடியும் வரை இருக்கலாம் அல்லது கலைக்கப்படலாம்.

**சரத்து – 243 – O**

- தொகுதி சீரமைப்புத் தொடர்பானச் சட்டங்களை நீதிமன்றத்தில் கேள்வி எழுப்ப முடியாது.
- பஞ்சாயத்து தேர்தல் தொடர்பான விசயங்களை நீதிமன்றம் சென்று வினவ முடியாது.

**ஊராட்சி அமைப்புகள்**

**கிராம ஊராட்சி**

- 500 – க்கு அதிகமான மக்கள்தொகை உள்ள கிராமங்களில் கிராம ஊராட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.
- கிராம ஊராட்சியின் உறுப்பினர்கள் மக்களால் தேர்தல் மூலமாக நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.
- கிராம ஊராட்சியின் தலைவர் தேர்தல் மூலம் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் 5 உறுப்பினர்களுக்கு குறையாமல் 15 உறுப்பினர்களுக்கு மிகாமல் உள்ளனர்.
- உறுப்பினர்கள் மற்றும் தலைவர் ஆகியோரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள்
- கிராம ஊராட்சியின் ஆய்வாளராக மாவட்ட ஆட்சியாளர் செயல்படுகிறார்.

**கிராம ஊராட்சி மன்றத்தின் மூலம் நிலைவேற்றப்படும் பணிகள், கடமைகள்**

- படிப்பகங்கள் ஏற்படுத்துதல், வானொலி மற்றும் தொலைக்காட்சி பெட்டிகள் நிறுவுதல், விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தலும் இதன் கடமைகள்.
- தெரு விளக்குகள் அமைத்தல்
- சிறுபாலங்கள் கட்டுதல்
- ஊர்ச் சாலைகள் அமைத்தல், சாலை பராமரிப்பு
- குடிநீர்க் கிணறு தோண்டுதல்
- கழிவு நீர்க்கால்வாய் அமைத்தல்
- சிறிய பாலங்கள் கட்டுதல்
- வீட்டுமனைப் பிரிவுகளுக்கு அனுமதி வழங்குதல்
- கிராம நூலகங்களைப் பராமரித்தல்.
- தொகுப்பு வீடுகள் கட்டுதல்.
- இளைஞர்களுக்கான பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டு மைதானங்களை நிறுவுதல், பராமரித்தல்.
- வீட்டு வரி, குழாய் வரி, தொழில் வரி, சொத்து வரி போன்ற வரிகள் வசூலிக்கப்படுகின்றன. அந்நிதியிலிருந்து பணிகளுக்குச் செலவிடப்படுகிறது.

**கிராம ஊராட்சியின் வருவாய்**

- வீட்டுவரி, தொழில்வதி, கடைகள் மீது விதிக்கப்படும் வரி அபராதக் கட்டணங்கள்.
- குடிநீர்க் குழாய் இணைப்புக் கட்டணம்.
- நிலவரியிலிருந்து ஒரு குறிப்பிட்ட பங்கு
- சொத்துரிமை மாற்றத்தின் மீதான வரியிலிருந்து ஒரு பங்கு.
- சொத்துரிமை மாற்றத்தின் மீதான தீர்வையில் இருந்து ஒரு பங்கும் கிராம ஊராட்சிக்கு வருவாயாக கிடைக்கிறது.

- இவைகளால் வரும் வருவாய் மட்டுமே போதாது. எனவே, மத்திய மாநில அரசுகள் பல்வேறு திட்ட நிதிகளையும், மானியங்களையும் உதவித் தொகைகளையும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக ஊராட்சிகளுக்கு வழங்குகின்றன.
- மத்திய, மாநில அரசுகள் வழங்கும் மானியங்கள் தான் முதன்மையான வருவாய் ஆகும்.

**கிராம சபை / ஊர்மன்றக் கூட்டம்**

- ஒவ்வொரு கிராமத்திலும் கிராம சபை ஊர் மன்றக் கூட்டம் அமைக்கப்பட்டுள்ளது.
- கிராம ஊராட்சியின் வாக்காளர் பட்டியலில் உள்ள அனைவரும் இதில் இடம் பெற்றுள்ளனர்.
- கிராம சபை கூட்டத்திற்கு கிராம ஊராட்சி தலைவர் தலைமை வகிப்பார்.
- ஊர்மன்றக் கூட்டங்கள் ஆண்டுகளுக்கு நான்கு முறை கூடுகின்றன.
  1. ஜனவரி 26 குடியரசு நாள்,
  2. மே 1 தொழிலாளர் நாள்
  3. ஆகஸ்ட் 15 விடுதலை நாள்
  4. அக்டோபர் 2 மகாத்மா காந்தி பிறந்த நாள்.
- கிராமத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தல், ஆண்டு வரவு செலவுத் திட்டங்களுக்கு ஒப்புதல், திட்டங்களின் பயனாளிகள் யார் என்பது போன்றவற்றிற்கு ஒப்புதல் அளித்தல் ஆகியவை கிராம சபையின் பணிகள் ஆகும்.

**வட்டார ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம்**

- கிராம ஊராட்சிக்கு அடுத்த நிலையில் உள்ளது ஊராட்சி ஒன்றியம் ஆகும்
- பல கிராம ஊராட்சிகள் ஒன்றிணைப்பட்டு அமைக்கப்படுவது ஊராட்சி ஒன்றியம் ஆகும்
- தேர்தல் மூலம் ஐன்தாயிரம் மக்கள்தொகைக்கு ஒரு பிரதிநிதி வீதம் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் தேர்தல் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கிறார்கள். அதாவது ஊராட்சி ஒன்றிய உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரை தலைவராகத் தேர்ந்தெடுக்கிறார்கள்.
- இவர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

- முழுச் சுகாதாரத் திட்டம் போன்ற பல்வேறு மத்திய-மாநில அரசுத் திட்டங்கள் மூலம் ஊராட்சிகளுக்கு நிதி, மானியங்கள் கிடைக்கின்றன.
- இவை தவிர்த்த பிற நாள்களிலும் ஊர்மன்றக் கூட்டங்களைக் கூட்டலாம் மிகவும் அவசரமாக ஏதேனும் திட்டங்களுக்கு ஒப்புதல் பெற வேண்டுமானால் சிறப்பு ஊர்மன்றக் கூட்டங்கள் கூட்டப்படும்.

**ஊராட்சி ஒன்றியங்கள் செய்யும் பணிகள்**

- ஊராட்சி ஒன்றியச் சாலைகளைப் பராமரித்தல்
- குடிநீர் வழங்குதல்
- ஊரக மருத்துவமனைகளை ஏற்படுத்துதல்.
- தொடக்கப் பள்ளிக் கட்டடங்களைப் பழுது பார்த்தல்.
- தாய்-சேய் நல விடுதிகளை நடத்துதல்.
- பொதுச் சந்தைகளை ஏற்படுத்துதல்.
- கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்துதல்.
- வேளாண்மைக் கருவிகள், உரங்கள் போன்றவற்றை வழங்குதல்.
- சமூகக் காடுகளை வளர்த்தல்-விரிவாக்குதல்.
- ஊராட்சி ஒன்றியத்தின் பணிகளை மேற்பார்வை செய்யவும், கண்காணிக்கவும் மாவட்ட நிருவாகத்தின் கீழ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உள்ளது.
- மாவட்ட ஆட்சியர், திட்ட அலுவலர், அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் இந்த முகமை மூலமாகப் பணிகளை விரைந்து நிறைவேற்றுவர்.

**வட்டார ஊராட்சி மன்றக் கடமைகள்**

- சாலைப் பராமரிப்பு, குடிநீர் வழங்கல், ஊரக மருந்தகங்களை ஏற்படுத்துதல், தாய் சேய் நல விடுதிகள் நடத்துதல், ஆரம்பப் பள்ளிகள் ஏற்படுத்துதல் போன்றவை இதன் கடமைகள் ஆகும்.
- பொதுச் சந்தைகளை ஏற்படுத்துதல், கால்நடை நோய் பராமரிப்பு, வேளாண்மை, குடிசைத் தொழில்களை மேம்படுத்துதல் ஆகியவையும் இதன் கடமைகள் ஆகும்.
- ஊராட்சி ஒன்றியத்தின் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வட்டார வளர்ச்சி அலுவலம் ஒருவரும் அவரது தலைமையில் ஒரு நிர்வாக அலுவலகம் ஏற்படுப்பப்பட்டுள்ளது.

**மாவட்ட ஊராட்சி**

- ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட ஊராட்சி அமைக்கப்பட்டுள்ளது,
- 50,000 மக்கள்தொகைக்கு ஒருவர் என்ற அடிப்படையில் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

- இதன் உறுப்பினர்களை மக்கள் நேரடியாக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கிறார்கள்.
- மாவட்ட ஊராட்சியின் தலைவர் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அதாவது உறுப்பினர்கள் தங்களுக்குள் ஒருவரை தலைவராக தேர்ந்தெடுகிறார்கள்.
- இவர்களின் பதவிக் காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

**மாவட்ட ஊராட்சியின் கடமைகள்**

- மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்தும், சாலை மேம்பாடு குறித்தும் அரசுக்கு ஆலோசனை வழங்குவது இதன் கடமையாகும்.
- மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல் போன்றவையும் இதன் கடமைகள் ஆகும்.

**மாவட்ட திட்டக்குழு**

- இதன் தலைவர் மாவட்ட ஊராட்சி தலைவர் ஆவார்.
- மாவட்டம் முழுவதற்கும் ஒரு வரைவு வளர்ச்சித் திட்டத்தை தயாரிப்பது இதன் பணி ஆகும்.
- இதன் உறுப்பினர்கள் உள்ளாட்சி அமைப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கின்றனர்.
- அம்மாவட்டத்தில் உள்ள மக்களவை உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களும் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.
- மாவட்ட முழுமைக்குமான வளர்ச்சித் திட்டம் தயாரித்து, மாநிலத் திட்டக் குழுவிற்கு அனுப்பி வைப்பது மாவட்டத் திட்டக் குழுவின் கடமை ஆகும்.